# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் பொங்கல் விழா!

## துணை முதல்வர் உரை... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி




தான் இருக்கின்றன. இந்த 14 மாதங்களும் ஒவ்வொரு நாளும், நம் தேர்தல் பிரச்சாரத்தை மக்களிடத்தில் கொண்டு போய் சேர்க்க வேண்டும். இந்த நான்கு வருடங்களில் கழக அரசு செய்திருக்கின்ற சாதனைகளை, மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும்.

நம் முதலமைச்சர் பொறுப்பேற்று போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கு கட்டணமில்லா பேருந்துத் திட்டம். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் கிட்டதட்ட 900-திலிருந்து ஆயிரம் ரூபாய் வரை இந்தத் திட்டத்தில் சேமிக்கிறார்கள். 610 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

**கல்வி ஊக்கத் தொகை!**

பெண்கள் படிக்க வேண்டும். பள்ளிக்கூடம் படித்தால் மட்டும் பத்தாது. உயர் கல்வி படிக்க வேண்டும் என்று புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சென்று, எந்தத் துறையில் சேர்ந்தாலும் அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்குகிறது நம் திராவிட மாடல் அரசு.

மாணவர்களும் கல்லூரி படிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிப் படிப்பு படிக்க வந்தால், அவர்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் தமிழ்ப்புதல்வன் என்ற திட்டத்தின் மூலம் கல்வி ஊக்கத்தொகை வழங்குகிறது நம் கழக அரசு. ஒவ்வொரு வருடமும் 8 லட்சம் மாணவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைகிறார்கள். தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப்பெண்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம், நம் தலைவர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டம். அதுதான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்கள் தினமும் பள்ளிக்கு வந்தார்கள் என்றால், முதலில் அவர்களுக்கு வயிறார சாப்பாடு. அதன் பிறகுதான் கல்வி. இப்போது பெற்றோர்கள் வாழ்த்தி அனுப்புகிறார்கள் என் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ள நம் திராவிட மாடல் அரசு இருக்கிறது. நம் முதலமைச்சர் இருக்கிறார் என்று வாழ்த்தி அனுப்புகிறார்கள். ஒவ்வொரு நாளும் திங்கள் முதல் வெள்ளி வரை 20 லட்சம் குழந்தைகள் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். எல்லோரும் கேட்கிறார்களே `திராவிட மாடல் அரசு' என்று சொல்கிறீர்களே? அது என்னவென்று? இதுதான் திராவிட மாடல் அரசு. மற்ற மாநிலங்களில் இருந்து வந்து இந்தத் திட்டத்தை எப்படி செயல்படுத்த வேண்டும் என்று மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதுதான் நம் திராவிட மாடல் அரசு. அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டுதான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.

**முத்தாய்ப்பாக ஒரு திட்டம்!**

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒரு திட்டம். நம் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம். மாதம் ஆயிரம் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். கடும் நிதி நெருக்கடி. ஆனாலும் நம் தலைவர் அவர்கள் அதை செய்துகாட்டினார். 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதி அறிவித்தார். முத்தமிழறிஞர் கலைஞரின் பெயரில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். விண்ணப்பித்தது ஒரு கோடியே 55 லட்சம் மகளிர். அதில் கிட்டத்தட்ட 70 சதவிகித மகளிருக்கு சரிபார்க்கப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு இன்றைக்கு ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. 15-ஆம் தேதிதான் கொடுப்பார்கள். ஆனால், இந்த முறை முதலமைச்சர் சொல்லிவிட்டார். `பொங்கல் பண்டிகை வருகிறது. அதற்கு, நான்கு நாளைக்கு முன்பே கொடுங்கள்' என்று நேற்று முன்தினமே எல்லா தொகையும் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்படி ஒவ்வொரு திட்டத்தையும் நம் தலைவர் அவர்கள் பார்த்து, பார்த்து செய்து கொண்டிருக்கிறார். இந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள் மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். திண்ணை பிரச்சாரம் செய்ய வேண்டும். எப்படி சென்ற நாடாளுமன்ற தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் கொடுத்தார்களோ? அதேபோல் இப்போது வர இருக்கின்ற ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் அதில் நாம் போட்டி போட போகிறோம்.

நாம் போட்டி போட போகிறோம் என்று சொன்னவுடனே அ.தி.மு.கவினர் விலகி விட்டார்கள். ஏனென்றால், அவர்களுக்குத் தெரியும் தோல்வி உறுதி செய்யப்பட்ட ஒன்று என்று. இதுவரைக்கும் பத்து தோல்வி பழனிச்சாமி. நம் தலைவர் அவர்கள் தலைவராக பொறுப்பேற்ற பிறகு சந்தித்த அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி. திரு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் சந்தித்த அனைத்துத் தேர்தல்களிம் தோல்வி. அதனால்தான் நம் தலைவர் அவர்கள் சொன்னார்கள், `பத்து தோல்வி பழனிச்சாமி' என்று.

**நம் தலைவர், நம் இலக்கு!**

இப்போது ஈரோடு சட்டமன்ற இடைத்தேர்தல் நடந்தால், அவர் பத்து தோல்வி பழனிச்சாமி இல்லை, சட்டமன்ற தேர்தலில் நிச்சயம் 12 தோல்வி பழனிச்சாமி ஆகப் போகிறார். நம் தலைவர் அவர்கள் நமக்கு இலக்கு கொடுத்திருக்கிறார். 200 தொகுதிகளில் நாம் வெற்றி பெற போவது நிச்சயம். `வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு' என்று சொல்லி இருக்கிறார்.

எந்த நம்பிக்கையில் சொல்லி இருக்கிறார். கழகத்தின் நிர்வாகிகள், கழகத்தின் அணிகள் நீங்கள் அத்தனை பேரும் சட்டமன்றத் தேர்தலில் களத்தில் இறங்கி, அடுத்த 14 மாதம் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, நம் சாதனைகளை மக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பீர்கள் என்ற நம்பிக்கையில் சொல்லி இருக்கிறார். எனவே, நான் உங்களிடத்தில் கேட்டுக் கொள்வதெல்லாம். தலைவர் சொன்னதைப் போல நம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள தொகுதிகள் காஞ்சிபுரம், உத்திரமேரூர், செய்யூர், மதுராந்தகம்.

200 வெற்றி பெறப்போவது உறுதி. அந்த 200-இல் இந்த நான்கு தொகுதிகளையும் நீங்கள் அனைவரும் உறுதி செய்து வெற்றியைத் தொடங்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வெற்றி 234 தொகுதிகளிலும் எதிரொலிக்கும் வகையில், இருக்க வேண்டும் என்று சொல்லி உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது பொங்கல் வாழ்த்துகளைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

முன்னதாக காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவில், கடப்பாக்கம் பகுதியில் கழகக் குடும்பத்தைச் சேர்ந்த தம்பி ஜா.பாஸ்கரன் - ப.இந்துமதி இணையரின் திருமணத்தை, இடைக்கழிநாட்டில் நடத்தி வைத்து,

மணமக்கள் இருவரும் தைப்பொங்கலும் - தமிழர் பண்பாடும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார்.

**பங்கேற்றவர்கள்!**

சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் மகாலட்சுமி, செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், இனியரசு, கோகுல கண்ணன், மலர்விழி குமார், சன் பிராண்ட் ஆறுமுகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இரா.நாகன், டி.ஆர்.நாராயணன், மருத்துவர் ஆர்.டி.அரசு, எம்.எஸ்.சுகுமார், அணிகளின் மாநில நிர்வாகிகள் சுகுமாரன், அன்பழகன், சுந்தரராமன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், மாநகரச் செயலாளர் தமிழ்ச்செல்வன், குமார், கண்ணன், தம்பு, சத்யசாய், சிவக்குமார், ராமச்சந்திரன், ஏழுமலை, சரவணன், சிற்றரசு, பாபு, பி.எம்.குமார், ஞானசேகரன், டி.குமார், குமணன், வி.எம்.பாபு, சேகர், சந்துரு, திலகர், தசரதன், கதிரேசன், மோகன்தாஸ், வி.டி.ஆர்.வி.எழிலரசன், சுந்தரமூர்த்தி, பாரிவள்ளல், பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏழுமலை, ராஜேந்திரன், மாநில ஐ.டி விங் துணைச் செயலாளர் இசை, சாந்தி ராமச்சந்திரன், சம்யுக்தா அய்யனார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் யுவராஜ், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சுகுமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணி, பால்ராஜ், சஞ்சய் காந்தி, அருள்முருகன், ஆண்டோ சிரில்ராஜ், யுவராஜ், ஜாக்டோ ஜியோ அமைப்பைச் சேர்ந்த தியாகராஜன், கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்ட மருவூர் அன்பழகன், பாஸ்கர் உள்பட கழக முன்னணியினர் பலரும்கலந்து கொண்டனர்.



தை திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழக அரசு தமிழகம் முழுவதும் உள்ள பொதுமக்களுக்கு இலவச பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கி வருகிறது. மேலும் இதன் ஒரு பகுதியாக திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குண்டூர் ஊராட்சியில் பர்மா காலனி பகுதியில் அமைந்துள்ள நியாய விலைக் கடையில் 953 குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழக அரசு வழங்கும் இலவச பொங்கல் பரிசு தொகுப்பினை பொதுமக்களுக்கு வழங்கினார். மேலும் இந்நிகழ்வில் வருவாய் கோட்டாட்சியர் அருள், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணை பதிவாளர் ஜெயராம், துணை பதிவாளர் பொது விநியோகம் திட்டம் மற்றும் திருவெறும்பூர் தாசில்தார் ஜெயப்பிரகாசம், மாவட்ட வழங்கல் அலுவலர் பொறுப்பு உதயகுமார், திருவெறும்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கங்காதரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# திருவள்ளுவர் பேரறிவுச் சிலை வெள்ளிவிழாவின் வியத்தகு பயன்கள்!





ஈராயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் வாழ்ந்த,உலக மக்கள் அனைவரும் வாழ்வாங்கு வாழ்ந்து சிறக்க வழிகாட்டிய மெய்ப்பொருள் அறிஞன் திருவள்ளுவன்.அவன் படைத்த ஒப்பற்ற நூலாகிய திருக்குறளை உலகம் கற்று உயர, தக்க சீர்மிகு பணிகளை எண்ணி எண்ணிச் செய்த ஏந்தல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆவர். அவற்றில் ஒன்று முக்கடல் கூடும் குமரி முனையில் நிறுவப்பட்ட உயர்ந்தோங்கிக் காட்சி தரும் திருவள்ளுவர் பேரறிவுச் சிலையாகும்.

இருபத்தைந்து ஆண்டுகள் அறநெறியின் சின்னமாய்க் காட்சி தந்து கொண்டிருக்கும் அச்சிலையின் வெள்ளிவிழாவைக் கொண்டாடும் அரிய வாய்ப்பு, திராவிட மாடல் எனச் சொல்லி, ‘திருக்குறள் காட்டும் நெறிப்படி தமிழ்நாட்டை ஆளும்’ அஞ்சாமை,ஈகை,அறிவு, ஊக்கம்,தூங்காமை, கல்வி,துணிவுடைமை,கொடை அளி,செங்கோல்,குடியோம்பல்,இன்சொல், காட்சிக்கு எளிமை,செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்பு,முறை செய்து காக்கும் நேர்மை,இயற்றல்,ஈட்டல்,காத்தல் வகுத்தலில் தேர்ச்சி எனத் திருவள்ளுவன் காட்டும் இறைமாட்சியின் இலக்கணமாய் இலங்கும் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கட்குக் கிட்டியிருக்கிறது.

**புலவர். மு.படிக்கராமு**
குறள்நெறி பரப்பும் தகைமையாளர், திருநெல்வேலி



“எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே செய்தற் கரிய செயல்” (489) என்னும் காலம் அறிதல் குறளுக்கு எடுத்துக்காட்டாய் இலங்கும் முதல்வர் அவர்கள், ‘நல்லது செய்வதில் எல்லாம் முதல்வர்’ ஆகத் திகழ்ந்து வருகிறார்கள். செய்த செயல்களும் செய்யத் திட்டம் வகுத்துத் தந்த செயல்களும், வள்ளுவத்தை வாழ்வியலாக்க வேண்டும் என்பதில் எத்தகைய திண்ணிய நெஞ்சினயராக முதலமைச்சர் அவர்கள் விளங்குகிறார்கள் என்பதைத் தெற்றனப் புலப்படுத்துகிறது.

திருக்குறள் நெறிகளில் பலவற்றை வேறொரு கோணத்தில் பரப்பிய வீரத்தவத்தர் விவேகானந்தர் மண்டபத்துடன் திருவள்ளுவர் பேரறிவுச் சிலையின் அடித்தளத்தை இணைக்கத் தொழில் நுட்பத்துடன் கண்ணாடி இழைப் பாலம் அமைத்து மக்கட்கு எளிய இனிய வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறீர்கள்.

மாணவர்களை, மாண்புகளை ஆக்குபவர்களாய் உருவாக்கிவிட்டால் நாடு எதிர் காலத்தில் ஏற்றம் பெறும் என்னும் நன்னோக்கால் உந்தப்பட்டு மாணவர்கட்கு திருக்குறள் ஒப்பித்தல் போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி,இசைப் போட்டி எனப் பல்வேறு போட்டிகள் நாடு முழுமையும் மாவட்ட வாரியாக நடத்தி வெற்றி பெற்றவர்கட்குப் பரிசு மழை வழங்கித் திருக்குறள் மீது ஆர்வமும் ஈடுபாடும் கொள்ளச் செய்திருக்கிறீர்கள்.

ஐயன் திருவள்ளுவனின் பேரறிவுச் சிலையின் வெள்ளி விழாவில் குறள்நெறி பரப்பும் தகைமையாளர் 22 பேர் திருவள்ளுவரின் சிலையின் காலடியில் வைத்து வான் மழை வாழ்த்த, கடலலை இசைமுழக்க முதலமைச்சர் அவர்கள் பரிசும் சான்றும் வழங்கி இனிமையாய், எளிமையாய் ஒரு தமிழ்க் குடும்ப விழாப் போல் நிகழ்த்தி அவர்கள் குறள் பரப்பும் தொண்டு மேலும் தொடர ஊக்கமூட்டினார். தமிழ் வளர்ச்சித் துறை அவர்களைப் பேணிய விதம் மிகச் சிறப்பு.

2024 திசம்பர் 30, 31 மற்றும் 2025 சனவரி முதல் நாள் ஆக மூன்று நாள்களிலும் வடிவமைக்கப் பட்ட அனைத்து நிகழ்வுகளும், வெள்ளி விழாவின் மாண்பினை எடுத்துக் காட்டின. திருக்குறளின் தனிச்சிறப்பு தன்னிகரற்ற தன்மையை, பொதுமை நோக்கை, இனிமையாய், சுவையுடன், உணர்வுடன் எடுத்துரைத்து மக்கள் மனதில் ஆழமாய்ப் பதியுமாறு அருமையான தலைப்புகளில், தகுதியான பெருமக்கள் பட்டிமன்றத்திலும், கருத்தரங்கிலும் பொழிந்து திருக்குறள் மணம் கன்னியாகுமரியில் மட்டுமல்லாது, உலகத் தமிழர்கள் அனைவரும் கண்டும் கேட்டும் மகிழச் செய்து தங்கள் கடமையை மிகச்சசிறப்பாக நிறைவேற்றி, புதிய திருக்குறட் பற்றாளர்கள் பல்லாயிரம் பேர்களை உருவாக்கி, வெள்ளி விழாவின் நோக்கை இனிதே நிறைவேற்றிக் காட்டினார்கள்.

திருக்குறள் களஞ்சியம் என போற்றுமாறு உருவாக்கப்பட்ட விழா மலர் வெளியிடப்பட்டது. திருக்குறள் பற்றி அறிய வேண்டிய செய்திகளையும், கருத்துகளையும், திருவள்ளுவர் சிலை பற்றி அறிந்து கொள்ளவேண்டிய அனைத்து நிலைகளையும் விளக்கும் கண்காட்சி, கண்காட்சி மட்டுமல்ல கருத்துக் காட்டியாய் மிளிர்ந்தது. ‘செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்’ என்பதற்கு ஏற்ப குறள் ஒலி இன்னிசையாய் முழங்கி இன்பத்தில் திளைக்க வைத்தது.

தந்தை பெரியார் அவர்கள் திருக்குறள் மாநாடு சிறப்புற நடத்தி, குறள் பரப்பும் பணியைச் சமுதாயப் பணியாகச் செய்தார்கள். அவர்களை உள்வாங்கிக் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் பல்கலைக் கழகங்களில் குறளாய்வுக்கு வழிவகுத்தார்கள். அவர்களை உள்வாங்கிக் கொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் செய்த பல்வேறு பணிகளில் ஒன்றே 133 அடி உயரத் திருவள்ளுவர் சிலை. ஐயன் திருவள்ளுவனின் பேரறிவுச் சிலையின் வெள்ளி விழாவில் நம் மாண்பு நிறை முதலமைச்சர் அறிவித்த வருங்காலச் செயல் திட்டம் இருக்கிறதே அஃது அவர்களை எல்லாரினும் மேலான ஆக்கப்பூர்மான செயல் வீரர் என்பதை உணர்த்தி விட்டது. இப்படித் திட்டமிட்டு செயல்படும் முதலமைச்சர் தமிழ்நாட்டிற்கு அமைய மாட்டாரா என 60 ஆண்டுகளாய் கனவு கண்டவன் நான். ஆகவே, அறிவிப்புக் கேட்டவுடன் கிடைத்தற்கரிய பயனுடைய உயர்பொருள் கிட்டியது போல் மகிழ்ந்து என்னை மறந்து கை குவித்து வணங்கினேன்.

நான் வணங்கி வரவேற்கும் திட்டம் வருமாறு: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திருக்குறளில் ஆர்வமும் புலமையும் மிக்க ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி வழங்கி மாவட்டத் தோறும் தொடர் பயிலரங்குகள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். திருக்குறள் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெறத் திட்டம் வகுக்கப்படும். இதற்காக ஆண்டிற்கு மாவட்டம் ஒன்றுக்கு மூன்று இலக்க ரூபாய் வழங்கப்படும். ஆண்டுக்கு 133 உயர் கல்வி நிறுவனங்களில், திருக்குறள் தொடர்பான கலை இலக்கிய அறிவுசார் போட்டிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தத் திட்டமிடப்படும். ஒவ்வொரு ஆண்டும் திசம்பர் கடைசி வாரம் குறள் வாரம் கொண்டாடப்படும். தமிழ் திறனறி தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான திருக்குறள் மாணவர் மாநாடு ஆண்டு தோறும் நடத்தப்படும். திருக்குறளும் உரையும் அரசு அலுவலகங்களில் எழுதப்படுவது போல, தனியார் நிறுவனங்களிலும் எழுதுவதற்கு ஊக்குவிக்க உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இத்தகைய அருமையான திட்டங்கள் செயல்படத் தொடங்கித் தொடர்ந்து இயங்கிவந்தால், திருக்குறளின் ஒளி வீச்சால் நாட்டில் அல்லவை அகன்று நல்லவை பெருகும். அறிவறிந்த, பழிபிறங்காப் பண்புடை நன்மக்கள் தொகை பெருகும். மக்கள் அன்பை அகத்துறுப்பாய் கொள்வர், ஒழுக்கத்தை உயிரினும் மேலாய்க் கருதி வாழ்வர், மக்கள் பிறரைக் குறைகூறார், தம் குற்றத்தைத் தாமே உணர்ந்து திருந்துவர், உலகம் பழித்ததை ஒழித்துப் புகழுடன் வாழ்வர், உள்ளுவ தெல்லாம் உயர்வே உள்ளுவர்; உலகத்து இயற்கை அறிந்து செயல்படுவர்; ஆற்றின் அருமை உடைய செயல்களையே ஆற்றுவர்; இன்னா செய்தார்க்கும் இனியவே செய்வர்; குற்றமிலனாய்க் குடி செய்து வாழ்வர்; வாழ்வாங்கு வாழ்வர். தமிழனைப் பிரிக்கும் தடைக் கற்கள் அகலும். ஏற்றதாழ்வு அகன்று, எல்லாரும் ஒன்று பட்டு ஒற்றுமையுடன் வாழ்வர்.

இத்தகைய மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் கால்கோள் செய்த முதலமைச்சர் அவர்கள் எண்ணியது எண்ணியாங்கு நடக்கத் துணை நிற்பது தமிழரின் தலையாய கடமையாகும்.

**வள்ளுவம் பரவ வேண்டும்**
**வாழ்வியல் துலங்க வேண்டும்**
**உள்ளுவது உயர்வு வேண்டும்**
**உரையெலாம் செயலில் வேண்டும்**
**எள்ளுவது தவிர்க்க வேண்டும்**
**ஏதிலார் பொறுக்க வேண்டும்**
**கொள்ளுவது அறமாய் வேண்டும்**
**கொடை வளம் வேண்டும் வேண்டும்.**